**FIRST INFORMATION REPORT**

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

8069850

C

1. District மாவட்டம் : Dharmapuri PS: காவல்நிலையம் V & AC Dharmapuri Year: ஆண்டு 2021 FIR No. மு.த.அ. எண் 06/AC/2021 Date நாள் 10.12.2021

2. (i) Act சட்டம்: The prevention of corruption Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Act 1988 as amended in Sections பிரிவுகள்: 7(A)
   (iii) Act சட்டம்: 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 09-12-2021 at
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 14.55 Hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time நேரம் 09-12-2021 at 20.45 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : Suo Moto
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: O/o the Sub-Registrar (West), Dharmapuri about 1½ km South-east
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : A. Immanuel Gnanasekar (b) Father's/ Husband's Name : Tr. Azariah
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 52/2021 (d) Nationality Christian (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : Deputy Supdt. of police (g) Address : O/o the Deputy Superintendent of Police, Vigilance and Anti-corruption, Dharmapuri.
   தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) Tr. M. Lakshmi Kanthan, Sub-Registrar, O/o the Sub-Registrar (West), Dharmapuri.
   2) Tmt. K. Radha, Data Entry Operator, O/o the Sub-Registrar (West), Dharmapuri
   3) Tr. V. Gunasekaran, Record clerk, O/o the Sub-Registrar (West), Dharmapuri
   4) Tr. M.K. Abisudin S/o Khadar Maideen, 2/1, Amutham colony, Dharmapuri Town, Dharmapuri.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Suo-moto.

A. [signature] 10/12/21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

10.12.2021 at 1545 hrs.

Name: பெயர் A. IMMANUEL GNANASEKAR
Rank: நிலை Deputy Supdt. of Police, ..........No. எண் ..........
Vigilance and Anti-corruption, Dharmapuri.

[signature]

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.6/AC/2021, u/s 7 and 7(A) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.

---

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக் காவல் கண்காணிப்பாளர் ஆகிய நான் 09.12.2021 ம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 16.00 மணிமுதல் 20.45 மணிவரையில் தருமபுரி மேற்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இன்று 10.12.2021 ம் தேதி மதியம் 11.00 மணிக்கு தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு பிரிவு கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.6/AC/2021, u/s 7 and 7(A) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 – ன்படி பதிவு செய்யப்பட்ட வழக்கின் விபரம் பின்வருமாறு.

09.12.2021 ம் தேதியன்று மதியம் சுமார் 14.55 மணிக்கு, தருமபுரி மாவட்டம், தருமபுரி மேற்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரபதிவு செய்வதற்காகவும், வில்லங்க சான்றிதழ் வழங்குவதற்காகவும், பத்திர நகல் எடுத்து தருவதற்காகவும், ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட ஆவணங்களுக்கு பத்திர பதிவு செய்ய வரும் பொதுமக்கள் மற்றும் ஆவண எழுத்தர்களிடமிருந்து கையூட்டு பணத்தை சார்பதிவாளர் மற்றும் அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின்பேரில், 09.12.2021 ம் அன்றே 15.45 மணிக்கு நான், அரசு சாட்சிகள் 1) திரு.R. மனோகரன், வருவாய் ஆய்வாளர், கிருஷ்ணாபுரம் உள்வட்டம், தருமபுரி வட்டம், தருமபுரி மாவட்டம். 2) திரு.M. இராமச்சந்திரன், கிராம நிர்வாக அலுவலர், கிருஷ்ணாபுரம் வருவாய் கிராமம், தருமபுரி வட்டம், தருமபுரி மாவட்டம் மற்றும் முதல் நிலை பெண் காவலர் (989), திருமதி. K.சென்னம்மாள், தருமபுரி நகர காவல் நிலையம், தருமபுரி மாவட்டம் மற்றும் காவலர்கள் குழுவுடன் தருமபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து அரசு வாகனங்களில் புறப்பட்டு, தருமபுரி மேற்கு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு 16.00 மணிக்கு அவ்வலுவலகத்தை திடீர் சோதனை செய்ய சென்றோம். அவ்லுவலகத்திற்கு உள்ளே நுழைந்தபோது மத்திய அறையில் மேற்கு பக்கம் கிழக்கு முகம் பார்த்தவாறு சார்பதிவாளர்

திரு.மு.லட்சுமிகாந்தன் அமர்ந்திருந்தார். அவரிடம் என்னையும், அரசு சாட்சிகள் மற்றும் காவலர்களையும் அறிமுகம் செய்துக் கொண்டு திடீர் சோதனை மேற்கொள்ள வந்த விபரத்தை தெரிவித்து, அரசு சாட்சிகள் முன்னிலையில் அந்த அலுவலகம் சோதனையிடப்பட்டது. அப்போது அந்த அலுவலகத்தில் மத்திய அறையில் சார்பதிவாளர் இருக்கைக்கு எதிரே வடக்கு சுவற்றையொட்டி தெற்கு முகம் பார்த்தவாறு ஒரு பெண் இருக்கையில் அமர்ந்திருந்தார். அவரை விசாரிக்க, அவர் தனது பெயர் K.ராதா என்றும், அந்த அலுவலகத்தில் Data Entry Operator–ஆக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவருக்கு எதிரே கிழக்கு முகம் பார்த்தவாறு டேபிள் முன்பு நின்றிருந்த ஒருவரை விசாரிக்க, தனது பெயர் வி.குணசேகரன் என்றும், அவ்வலுவலகத்தில் பதிவறை எழுத்தராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் அவ்வலுவலத்தில் சார்பதிவாளர் இருக்கைக்கு எதிரே தெற்கு முகம் பார்த்தவாறு அமைந்திருந்த கண்ணாடி கேபின் அறையில் இரண்டு பெண்களும், ஒரு ஆணும் இருந்தனர். அவர்களை விசாரிக்க, அதில் ஒருவர் தனது பெயர் எஸ்.பிரசாத் என்றும், அவ்வலுவலகத்தில் Camera Operator–ஆக பணிபுரிந்து வருவதாகவும், மற்றொருவர் தனது பெயர் D.சிந்து என்றும், அவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், மற்றொருவர் தனது பெயர் M.கவிதா என்றும், அவ்வலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிவதாகவும் தெரிவித்தனர். மேற்படி கண்ணாடி கேபின் அறைக்கு எதிரே நின்றிருந்த நபரை விசாரிக்க, அவர் தனது பெயர் M.K.அபிசுதீன் என்றும் தான் எண். 2/1, அமுதம் காலனி, தருமபுரி என்ற முகவரியில் வசித்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் எதற்காக மேற்கு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்தீர்கள் என்று கேட்க, ஒரு ஆவணம் சம்மந்தமாக சார்பதிவாளரிடம் விளக்கம் கேட்க வந்ததாக தெரிவித்தார். பின்னர் அனைத்து நபர்களையும் சார்பதிவாளர் அலுவலக மத்திய பகுதிக்கு வரவழைக்கப்பட்டனர். பிறகு நான், சார்பதிவாளர் திரு.மு.லட்சுமிகாந்தன் அவர்களிடம் தனிநபர் பணப்பதிவேடு குறித்து கேட்டேன். அவர் அந்த பதிவேட்டை எடுத்து ஆஜர் செய்தார். அதனை அரசு சாட்சிகள் முன்னிலையில் பார்வையிட்டபோது 09.12.2021 ம் தேதி இளநிலை உதவியாளரான செல்வி.சிந்து அவர்கள் மட்டும் தனிநபர் கையிருப்பு ரூ.150/- தன்னிடம் உள்ளதாக எழுதி

கையொப்பம் செய்திருந்தார். அலுவலகத்தில் பணிபுரியும் வேறு யாரும் தனிநபர் கையிருப்பு குறித்து பதிவு செய்யவில்லை. அது குறித்து சார்பதிவாளரிடம் விளக்கம் கேட்க, அதற்கு அவர் அன்று முகூர்த்த நாள் என்பதால் அவசரத்தில் பதிவுகள் செய்யப்படவில்லை என்று தெரிவித்தார். அவரின் இருக்கையை அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனையிட்டபோது அதில் பணமோ, சந்தேகத்திற்கிடமான பொருட்களோ காணப்படவில்லை. அவரின் சட்டையின் இடது பக்க வெளிப்புற பாக்கெட்டில் உள்ளவற்றை வெளியே எடுத்து சோதனை செய்தபோது அதில் 100 ரூபாய் இரண்டு எண்ணிக்கையிலும், 20 ரூபாய் ஒன்றும், 10 ரூபாய் ஒன்றும் என மொத்தம் ரூ.230/- இருந்தது. அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, அந்த பணம் தன்னுடைய கை செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ள தக்கதாக இருந்ததால், அந்த பணத்தை அவரிடமே அரசு சாட்சிகள் முன்னிலையில் திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் சார்பதிவாளர் இருக்கைக்கு எதிரே தெற்குமுகம் பார்த்தவாறு இருந்த இருக்கையின் பொறுப்பு யாருடையது என்று கேட்க, அந்த இருக்கை அலுவலக Data Entry Operator ஆன திருமதி.ராதா என்று தெரிவித்தனர். திருமதி.ராதா அவர்களின் இருக்கையின் அருகே தறையில் வைக்கப்பட்டிருந்த அவரது பின்க் கலர் கைப்பையை திறந்து சோதனை செய்தபோது கீழ்கண்டவாறு பணம் இருப்பது கண்டறியப்பட்டது. 500X4 = ரூ.2000/-, 100 X2 = ரூ.200/-, 50 X1 = ரூ.50/-, 20 X2 = ரூ.40, 10 X1 - ரூ.10 என மொத்தம் ரூ. 2300/- இருந்தது. அந்த பணம் குறித்து திருமதி.ராதா அவர்களிடம் கேட்டபோது, அந்த பணம் அவரது சொந்த பணம் என்றும், கைசெலவிற்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ள தக்க வகையில் இல்லாததாலும், மேற்படி தொகையில் ரூ.2000/- ஐ லஞ்சமாக பதிவுதாரர்களிடமிருந்து பெற்றிருக்கலாம் என்று நம்புவதற்கு முகாந்திரம் இருந்ததால், மேற்படி தொகையில் 500X4 =ரூ.2000/- மட்டும் அரசு சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் என்னால் கைப்பற்றப்பட்டது. மீதிப்பணம் ரூ.300/- மட்டும் மேற்படி திருமதி.ராதா அவர்களிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் மேற்படி அறையின் மத்தியில் சார்பதிவாளர் இருக்கைக்கு எதிரே போடப்பட்டிருந்த சீல் வைக்கும் டேபிள் யாருடையது

என்று கேட்க, அந்த டேபிள் பதிவறை எழுத்தரான திரு.குணசேகரன் என்பவருடையது என தெரிவித்தனர். திரு.குணசேகரன் அவர்களை அழைத்து அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரை சோதனை செய்தபோது அவரது சட்டையின் இடதுப்புற வெளிப்புற பாக்கெட்டில் 500X1 = ரூ.500/-, 200 X1 = ரூ.200/- என மொத்தம் ரூ.700/- இருந்தது. அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, அவர் அந்த பணம் தன்னுடைய கைசெலவிற்காக வைத்துள்ள தனது சொந்த பணம் என்று தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ள தக்க வகையில் இல்லாததாலும், மேற்படி தொகையில் ரூ.500/- ஐ லஞ்சமாக பதிவுதாரர்களிமிருந்து பெற்றிருக்கலாம் என்று நம்புவதற்கு முகாந்திரம் இருந்ததால், மேற்படி தொகையில் 500X1=ரூ.500/- ஐ மட்டும் அரசு சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் என்னால் கைப்பற்றப்பட்டது. மீதிப்பணம் ரூ.200/- மட்டும் மேற்படி திரு.குணசேகரன் அவர்களிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் மேற்படி அறையின் கிழக்கு பக்கம் தெற்கு முகம் பார்த்தவாறு அமைக்கப்பட்டிருந்த கண்ணாடி கேபின் அருகே நின்றுக் கொண்டிருந்த திரு.M.K.அபிசுதீன் என்பவரை அழைத்து அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்தபோது, அவரது சட்டையின் இடதுபக்க வெளிப்புற பாக்கெட்டை அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்தபோது கீழ்கண்டவாறு பணம் இருந்தது. 500X49 = ரூ.24500/-, 200X2 =ரூ.400/- 100 X5 =ரூ.500/- என மொத்தம் ரூ. 25400/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அதற்கு அவர் தான் ஒய்வு பெற்ற கிராம நிர்வாக அலுவலர் என்றும், தொப்பூரைச் சேர்ந்த வக்கீல் கோவிரெட்டி என்பவரின் அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், அவ்வப்போது ஆவணங்கள் பதிவு செய்வதற்காக சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு சென்று வருவதாகவும், அதேபோன்று 09.12.2021 ம் தேதி ஒரு ஆவணம் தொடர்பாக விளக்கம் கேட்பதற்காக தருமபுரி மேற்கு சார்பதிவாளர் அலுவலகம் வந்ததாகவும், அன்று ஆவண எண்.6572/2021 என்ற ஒரே ஒரு பாகப்பிரிவினை பத்திரம் பதிவு செய்ததாகவும் தெரிவித்தார். மேலும் மேற்படி பணம் ரூ.25,400/– ஐ பத்திரம் வாங்குவதற்காக கொண்டு வந்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ள தக்க வகையில் இல்லாததாலும், அன்று பதிவு செய்யப்பட்ட பத்திரத்திற்காக லஞ்சமாக மேற்படி தொகையில் ரூ.25,000/–ஐ

சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிவோருக்கு கொடுப்பதற்காக கொண்டு வந்திருக்கலாம் என்று நம்புவதற்கு முகாந்திரம் இருந்ததால், மேற்படி தொகையில் ரூ.25,000/- மட்டும் அரசு சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் என்னால் கைப்பற்றப்பட்டது. மீதிப்பணம் ரூ.400/- மட்டும் மேற்சொன்ன திரு.M.K.அபிசுதீன் அவர்களிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் அவர் கையில் வைத்திருந்த பேப்பர்கள் குறித்து நான் கேட்டபோது, அவை பத்திர பதிவு செய்வதற்காக தயார் செய்யப்பட்ட மாதிரி பத்திர நகல்கள் எனவும், அது தொடர்பாக சார் பதிவாளர் அவர்களிடம் விளக்கம் கேட்க வந்ததாகவும் தெரிவித்தார். நான் அதனை வாங்கி பார்வையிட்டபோது தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், நஞ்சன் கொட்டாய் கிராமத்தில் வசித்து வரும் திரு.மாதையன் மகன் திரு.எம்.சங்கர் என்பவரது பெயரில் தயார் செய்யப்பட்டிருந்த பிழைதிருத்தல் பத்திரம் 26 தாள்கள் மற்றும் தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், அதியமான்கோட்டை மஜரா என்ற முகவரியில் வசிக்கும் திரு.பெருமாள் மகன்கள் திரு.செந்தில்குமார் மற்றும் சம்பத்குமார் ஆகிய இருவர் பெயரில் எழுதப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் மாதிரி 26 தாள்கள் மற்றும் தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், சாமிசெட்டிப்பட்டி கிராமத்தில் வசித்து வரும் திரு.இராஜாமணி அவர்களின் மனைவி திருமதி.ராணி அவர்களின் பெயரில் தயார் செய்யப்பட்டிருந்த மாதிரி கிரய பத்திரம் 34 தாள்கள் இருப்பது கண்டறியப்பட்டது. மேற்படி மாதிரி பத்திர நகல்கள் ஒளி நகல் எடுக்கப்பட்டு அரசு சாட்சிகள் முன்னிலையில் வழக்கின் நிமித்தம் மேல் விசாரணைக்காக மகஜரில் என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி கண்ணாடி அறையின் உள்ளே அன்று பணிபுரிந்த நபர்கள் யார் என்பது குறித்து கேட்ட போது, மேற்படி அறையின் உதவியாளரான திருமதி.கவிதா அவர்கள் அவரது இருக்கையினை காட்டினார். அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரது இருக்கையை சோதனை செய்தபோது, பணமோ அல்லது சந்தேகக்குரிய பொருட்களோ கண்டறியப்படவில்லை. உதவியாளர் திருமதி.கவிதா அவர்களின் கருப்பு நிற கைப்பையை திறந்து சோதனை செய்தபோது கீழ்கண்டவாறு பணம் இருப்பது கண்டறியப்பட்டது. 500X1 =ரூ.500/-, 10 X2 =ரூ.20/- என மொத்தம் ரூ.520/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அந்த பணம் அவரது சொந்த பணம் என்றும், மருந்து வாங்குவதற்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம்

ஏற்றுக்கொள்ளதக்க வகையில் இருந்ததால், அரசு சாட்சிகளின் முன்னிலையில் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் அந்த கண்ணாடி அறையில் இருந்த இளநிலை உதவியாளரான செல்வி.சிந்து அவர்களின் இருக்கையை சோதனை செய்தபோது, பணமோ அல்லது சந்தேகக்குரிய பொருட்களோ கண்டறியப்படவில்லை. இளநிலை உதவியாளர் செல்வி.சிந்து அவர்களின் நீல நிற சிறிய மணிபர்சை திறந்து சோதனை செய்தபோது கீழ்கண்டவாறு பணம் இருப்பது கண்டறியப்பட்டது. 500X1= ரூ.500/-, 200X1= ரூ.200/-, 100X2= ரூ.200/-, 50 X1- ரூ.50/- என மொத்தம் ரூ.950/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அந்த பணம் அவரது சொந்த பணம் என்றும், தான் ஒரு மாற்றுத்திறனாளி என்றும், தனது இடதுபக்க காலில் பிளேட் வைக்கப்பட்டுள்ளதாகவும், மருந்து வாங்குவதற்காக அந்த பணத்தை வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளதக்க வகையில் இருந்ததால், அரசு சாட்சிகளின் முன்னிலையில் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேற்படி கண்ணாடி அறையினுள் இருந்த கேமரா ஆப்ரேட்டர் திரு.பிரசாத் அவர்களை சோதனை செய்தபோது, அவரது சட்டையின் இடதுபக்க வெளிப்புற பாக்கெட்டில் கீழ்கண்டவாறு பணம் இருந்தது. 20X2= ரூ.40/-, 10X1 =ரூ.10/- என மொத்தம் ரூ.50/- இருந்தது. அந்த பணம் அவரது சொந்த பணம் என்று கூறியதால், அவரிடமே அரசு சாட்சிகளின் முன்னிலையில் திரும்ப என்னால் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மேற்படி கண்ணாடி அறையையொட்டி கிழக்கு புறத்தில் மேற்கு முகம் பார்த்தவாறு அமைக்கப்பட்டிருந்த அறையினை அரசு சாட்சிகள் மற்றும் சார்பதிவாளர் முன்னிலையில் சோதனை செய்தபோது, அந்த அறையின் தெற்கு சுவற்றினையொட்டி ஆவணங்களின் நகல்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் மேலே வைக்கப்பட்டிருந்த காக்கி கலர் அட்டை பெட்டியினை கீழே இறக்கி சோதனை செய்தபோது அதன் உள்ளே பயன்படுத்தப்படாத சிடிக்கள் இருந்தது. அவற்றிற்கிடையே கத்தையாக ரூ.500/- நோட்டுகள் இருப்பது கண்டறியப்பட்டது. அதனை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் ரூ.500/- தாள்கள் 50 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.25,000/- இருப்பது தெரியவந்தது. அந்த பணம் குறித்து சார்பதிவாளர் அவர்களிடம் விளக்கம் கேட்க, அந்த அறையில் பணம் எவ்வாறு வந்தது

என்று தனக்கு தெரியாது என்றும், அந்த அறை உணவு அருந்தும் அறையாக பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், பத்திர பதிவுதாரர்களிடமிருந்து லஞ்சமாக பெறப்பட்ட பணமாக இருக்கலாம் என்று நம்புவதற்கு முகாந்திரம் இருப்பதாலும் விசாரணைக்காக அரசு சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் மேற்படி பணம் ரூ.25,000/- என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர் அந்த அறையின் நடுவில் போடப்பட்டிருந்த மேஜையின் மீது வைக்கப்பட்டிருந்த நோட்டுகளை திறந்து பார்த்தபோது அவற்றில் தருமபுரி மேற்கு சார்பதிவகம் தொகுதி எண்.14 SCAN REGISTER 28.12.2015 முதல் 29.08.2016 என்று எழுதப்பட்டிருந்த பதிவேட்டை திறந்து பார்வையிட்ட போது பக்க எண்.253 என்று எழுதப்பட்டிருந்த பக்கத்தில் ஐநூறு ரூபாய் தாள்கள் ஐந்து எண்ணிக்கையில் மொத்தம் ரூ.2,500/- இருந்தது. மேற்படி பதிவேடானது 1 முதல் 399 பக்கங்கள் வரை உள்ள ஒரு பதிவேடாக இருந்தது. மேற்படி பணம் குறித்து சார் பதிவாளர் அவர்களிடம் விளக்கம் கேட்க, அந்த பதிவேடு தற்போது பயன்பாட்டில் இல்லையென்றும், அதில் பணம் எவ்வாறு வந்தது என்று தனக்கு தெரியாது என்றும் கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், பத்திர பதிவுதாரர்களிடமிருந்து லஞ்சமாக பெறப்பட்டு அந்த பதிவேட்டில் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று நம்புவதற்கு முகாந்திரம் இருப்பதாலும், விசாரணைக்காக அரசு சாட்சிகள் முன்னிலையில் மேற்படி பணம் ரூ.2,500/- என்னால் கைப்பற்றப்பட்டது. மேற்படி பதிவேட்டின் பக்க எண்.253 மற்றும் முன்பக்க அட்டை ஒளி நகல் எடுக்கப்பட்டு, அதில் சார்பதிவாளர் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு மகஜரில் என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி அறையை ஒட்டி தெற்குபுறத்தில் மேற்கு முகம் பார்த்தவாறு அமைக்கப்பட்டிருந்த கண்ணாடி அறையினை திறந்து சோதனை செய்தபோது, அதன் உள்ளே பழைய ஆவணங்கள் மற்றும் காலவதியான கணிணி உபகரணங்கள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றினுள் சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ அல்லது பொருளோ காணப்படவில்லை. பின்னர் மேற்படி அலுவலகத்தின் சார்பதிவாளர் அறையையொட்டி மேற்கு புறத்தில் கிழக்கு முகம் பார்த்தவாறு பதிவு அறை இருந்தது. அதனை திறந்து அரசு

சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்தபோது, அந்த அறையின் நடுவில் கோத்ரேஜ் இரும்பு பாதுகாப்பு பெட்டகம் வைக்கப்பட்டிருந்தது. அதனை திறந்து சோதனையிட்ட போது அவற்றில் கீழ்கண்டவாறு பணம் இருப்பது கண்டறியப்பட்டது. 500X22= ரூ.11,000/-, 200X41 =ரூ.8,200/-, 100X109 =ரூ.10,900/-, 50X5 =ரூ.250/-20X1 =20/-, 10X3 = ரூ.30/- என மொத்தம் ரூ.30,400/- இருந்தது. அது குறித்து சார்பதிவாளரிடம் நான் விளக்கம் கேட்டபோது, அதற்கு அவர் அந்த பணம் 08.12.2021 வரை வசூல் செய்யப்பட்ட கொடிநாள் நிதி மற்றும் நிரந்த முன் பணம் ரூ.100/- என மொத்தம் ரூ.30,400/- இருப்பதாக தெரிவித்தார். மேலும் 2021-2022 ஆண்டிற்குரிய கொடிநாள் நிதி பதிவேட்டியினை ஆஜர் செய்தார். அதனை பார்வையிட்ட போது வசூல் செய்யப்பட்ட தொகைக்குரிய பதிவுகள் இருப்பது கண்டறியப்பட்டது. அந்த பதிவேட்டில் நான் மற்றும் அரசு சாட்சிகள் சுருக்கொப்பம் செய்தோம். அந்த பணத்திற்குரிய பதிவுகள் முறையாக இருந்ததால் மேற்படி பணம் ரூ.30,400/- அரக சாட்சிகள் முன்னிலையில் சார்பதிவாளர் திரு.லட்சுமி காந்தன் அவர்களிடமே என்னால் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மேற்படி பதிவு அறையினுள் வைக்கப்பட்டிருந்த ஆவணங்களை சோதனையிட்ட போது சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ அல்லது பொருளோ கண்டறியப்படவில்லை. பின்னர் சார்பதிவாளர் அவர்களிடம் அன்று பதிவு செய்யப்பட்ட பத்திரங்களின் விவரங்கள் குறித்து கேட்டபோது, அன்று தருமபுரி மேற்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் 31 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு, அதற்குரிய கட்டணங்கள் முறையாக செலுத்தப்பட்டிருப்பதாக தெரிவித்து, அதற்குரிய விவரங்களை அலுவலக கணிணியிலிருந்து பதிவிறக்கம் செய்து, அதில் சான்றொப்பம் செய்து என்னிடம் வழங்கினார். அதனை பார்வையிட்ட போது பதிவு கட்டணமாக ரூ.3,23,578/- பெறப்பட்டிருந்தது. Section-41 கணக்கின் கீழ் ரூ.2,82,793/– பெறப்பட்டிருந்தது. மேற்படி கட்டணங்கள் இணைய வழியில் அரசு கணக்கில் செலுத்தப்படுவதாக சார்பதிவாளர் அவர்கள் தெரிவித்தார். பின்னர் ஒருங்கிணைந்த H கணக்கு குறித்து சார்பதிவாளர் அவர்களிடம் கேட்டபோது, கணிணியில் இருந்து பதிவிறக்கம் செய்து, சான்றொப்பம் செய்து 09.12.2021 தேதிக்குரிய H கணக்கை சார்பதிவாளர் அவர்கள் ஆஜர் செய்தார்.

அதனை பார்வையிட்ட போது அதில் A,B,C,D,E,F மற்றும் CD, Sub Division ஆகிய கணக்குகளில் ரூ.9,26,249/- இணைய வழியில் அரசு கணக்கில் வசூல் செய்யப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது. பின்னர் நான் சார்பதிவாளர் அவர்களிடம் 09.12.2021 ம் தேதியன்று பதிவு செய்யப்பட்டு பதிவுதாரர்களிடம் திரும்ப ஒப்படைக்காமல் இருக்கும் பத்திரங்கள் குறித்து கேட்டபோது, ஆவண எண்.6567/2021, 6570/2021, 6573/2021, 6577/2021, 6579/2021 ஆகிய ஐந்து ஆவணங்கள் திரும்ப ஒப்படைக்காமல் இருப்பதாக தெரிவித்தார். மேற்படி ஆவணங்களை முறையாக பதிவுதாரர்களிடம் ஒப்படைக்குமாறு சார்பதிவாளர் அவர்களிடம் அறிவுறுத்தினேன். பின்னர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் 01.01.2021 முதல் 31.12.2021 வரை, இயக்க பதிவேடு தொகுதிஎண்.39 என்று எழுதப்பட்டிருந்த பதிவேடு, 01.01.2021 முதல் தொகுதி எண்.3 என்று எழுதப்பட்டிருந்த பண பதிவேடு, 01.01.2021 முதல் 31.12.2021 வரை தொகுதி எண்.51 என்று எழுதப்பட்டிருந்த வருகை பதிவேடு ஆகியவற்றினை பார்வையிட்டு நானும், அரசு சாட்சிகளும் சுருக்கொப்பம் செய்தோம். மேற்படி பதிவேடுகளின் தொடர்புடைய பக்கங்கள் ஒளி நகல்கள் எடுக்கப்பட்டு சார்பதிவாளர் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு வழக்கின் விசாரணைக்காக மகஜரில் என்னால் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின் முடிவில் சார்பதிவாளர் திரு.மு.லட்சுமிகாந்தன், Data Entry Operator திருமதி.K.ராதா, பதிவறை எழுத்தர், திரு.வி.குணசேகரன் மற்றும் தனிநபர் M.K.அபிசுதீன் ஆகியோர்களிடம், தருமபுரி மேற்கு சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்தும், அவர்களிடமிருந்தும் கைப்பற்றப்பட்ட பணம் குறித்து கேட்டபோது அவர்களால் திருப்திகரமான விளக்கம் தரஇயலவில்லை. எனவே ஏற்கனவே எனக்கு கிடைத்த தகவல்படி, அந்த தொகைகள் பத்திர பதிவு ஆவண எழுத்தர்களிடமிருந்தோ, இடைதரகர்களிடமிருந்தோ சார்பதிவாளர் திரு.மு.லட்சுமிகாந்தன் அவர்கள் தனது பதவியை துஷ்பிரயோகம் செய்து கையூட்டாக பெற்றிருக்கக்கூடும் என்பதற்கான போதுமான முகாந்திரம் இருப்பதாக அறியப்பட்டதால், இன்று 10.12.2021 ந்தேதி மதியம் 11.00 மணிக்கு எதிரிகள் 1) திரு.மு.லட்சுமிகாந்தன், சார்பதிவாளர், 2) திருமதி.K.ராதா, Data Entry Operator, 3) திரு.வி.குணசேகரன், பதிவறை எழுத்தர்

ஆகியோர்கள் மீது தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.6/AC/2021, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ன் படியும், 4) எதிரி திரு.M.K.அபிசுதீன் (தனிநபர்) என்பவர் மீது u/s 7(A) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ன் படியும் வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் சோதனையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளின் அசல் ஆகியவற்றை மாண்புமிகு தருமபுரி மாவட்ட தலைமை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் மேல் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்பட்டது.

A. [signature] 10/12/21

**(A.இம்மானுவேல் ஞானசேகர்)**
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
தருமபுரி.